# மகளிர்
## மேம்பாட்டுத் திட்டங்கள்



## பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

TAMIL NADU INSTITUTE OF URBAN STUDIES

LEAD KINDLY LIGHT


**தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்**

**கோயம்புத்தூர்**

*பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்*

# மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த பயிற்சி

## கையேடு

*ஆக்கம்*

*நகராட்சி நிர்வாக ஆணையரகம்*

*சென்னை*

பயிற்சி வடிவமைப்பு & செயலாக்கம்

**தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்**

கோயம்புத்தூர்

© தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641 011

பதிப்பு : 2008

வெளியிடுவோர்

**தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்**
203, அழகேசன் சாலை,
சாயிபாபா காலனி,
கோயம்புத்தூர் - 641 011
தொலைபேசி : 0422 - 2441086
நிகரி : 0422 - 2457404
மின்னஞ்சல் : tniuscbe@vani.net
இணையம் : tnius.org

# முன்னுரை

நகர்ப்புற வளர்ச்சியில் நாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் நகர்ப்புற வறுமையும் ஒன்று. இவ்வறுமையினை நமது சமுதாயத்திலிருந்து முற்றிலும் அகற்றுவதையே முக்கிய குறிக்கோளாக கொண்டு டிசம்பர் 1997 ஆம் ஆண்டு மத்திய அரசால் உருவாக்கப்பட்டதே பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (Swarna Jayanthi Shahari Rojgar Yojana - SJSRY)ஆகும். மாநில அரசு மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக இத்திட்டத்திற்கு பெறுமளவு நிதி ஒழக்கீடு செய்யப்பெற்றுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கடமை என்னவெனில், அடிப்படையில் சமுதாயக் குழுவினை உருவாக்குதலும் அதன் வாயிலாக சுய தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்யவும் வழிவகுத்துக் கொடுத்தல் ஆகும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தி நகர்ப்புற வறுமை ஒழிப்புக்காக செயல்படுத்தப்பட்ட முந்தைய திட்டங்களைப் போல் அல்லாது இந்தத் திட்டம் அடிப்படையில் சமுதாயக் குழுக்களை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாய மக்களின் நேரிடையான பங்களிப்பின் மூலமுமே செயல்படுத்தப்படுகிறது, மேலும் வறுமைக் கோட்டிற்குத் கீழ் வாழும் நகர்புற ஏழை மக்களை இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பெண்களின் மூலம் நேரடியாக திட்டம் ஏழைக் குடும்பங்களைச் சென்றடைய ஒரு வாய்ப்பாக அமைகிறது. இத்திட்டம் தனது இலக்கினை வெற்றிகரமாக சென்றடைய வேண்டுமெனில் அதற்கான பயிற்சிகள் மற்றும் தகவல், கல்வி தொடர்பு போன்றவைகள் அத்தியாவசியமாகின்றன. இதை நடைமுறைப் படுத்துவதற்காக கோயம்புத்தூரில் செயல்பட்டுவரும் தமிழ் நாடு நகரியல் பயிற்சி நிறுவனமானது (Tamil Nadu Institute of Urban Studies) இத்திட்டத்தின் கீழ்ப் பயிற்சிகளை ஒருங்கிணைக்கும் முதன்மை நிறுவனமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், அலுவல் சார்ந்த களப்பணியாளர்கள் மற்றும் நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இத்திட்டம் குறித்த வழிமுறைகள், இத்திட்டக் கோட்பாடு, திட்ட செயலாக்கம், திட்ட கண்காணிப்பு மற்றும் ஆங்காங்கே நிகழும் வெற்றிச் செய்திகள் ஆகியவற்றை பயிற்றுவிப்பதிலும், தொகுப்பதிலும் இந்நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாகப் பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற மகளிர் மேம்பாட்டு திட்டங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் அடங்கிய இக்கையேடு, இத்திட்டத்தினை செயல்படுத்தி வரும் அனைத்துத் துறைசார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் பயனுடையதாக இருக்குமென நம்புகின்றேன். மேலும் இப்பயிற்சி கையேடு தயாரிப்பதிலும், பயிற்சியின் அனைத்து ஒருங்கிணைப்பு பணியினை சிறப்பாக செய்து வரும் பேராசியர்களுக்கு எனது பாராட்டுதல்கள்.

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டப் பயிற்சியினை நடத்துவதில் அனுபவமும் பயிற்சியும் பெற்று எங்களுக்கு முழு ஒத்துழைப்பை அளிது வரும் அனைத்து நகராட்சி ஆணையர்கள், உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இயக்குநர்
கோயம்புத்தூர் - 641 011

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பெண்கள் மேம்பாட்டிற்கான திட்டங்கள் | 1 |
| 2. | சமூக நலத்திட்டங்கள் | 4 |
| 3. | தாட்கோ - வளர்ச்சித் திட்டங்கள் | 11 |
| 4. | மாவட்ட தொழில் மையம் | 25 |
| 5. | மாவட்ட அளவில் ஆரம்பிப்பதற்கு ஏற்புடைய தொழில்கள் குறித்த பட்டியல் | 27 |

# பெண்கள் மேம்பாட்டிற்கான திட்டங்கள்

## 1. பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | சுயதொழில் செய்து வருவோருக்குச் சிறு மற்றும் குறுந்தொழில்கள் அமைக்க வாய்ப்புகள் ஏற்படுத்தித்தருவது |
| தகுதி | : | எட்டாம் வகுப்பு தேர்ச்சி, அரசு அங்கீகாரம் பெற்ற கல்விக் கழகத்தில் தொழிற்கல்வி.<br>ஒரே குடியிருப்பில் 3 ஆண்டுகள் தொடர்ந்து வசித்திருக்க வேண்டும். |
| உதவியின் வகை | : | அனைத்து பொருளாதார மற்றும் நடைமுறை நடவடிக்கைகள் |
| உதவி மற்றும் அதன் வரம்பு | : | கடன் ரூபாய் 2 லட்சம் (ஒருவர்)<br>ரூபாய் 2 லட்சம் முதல் 10 லட்சம் வரை (இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள்) |
| மானியம் | : | திட்டச் செலவில் 15 விழுக்காடு அல்லது அதிக பட்சமாக ரூபாய் 7500 |
| அணுகவேண்டிய முகவரி | : | சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் |

## 2. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (ஸ்வர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா)

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | வேலைத் திட்டங்கள் செயல்படுத்த தனிநபர் உதவி அளித்தல்.<br>நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (DWCUA)<br>திறன் உள்ள பயனீட்டாளர்களுக்கும் மற்றும் சுயதொழில் முனைவோருக்கும் திறன் அதிகரிப்பதற்கான நகர்ப்புற வேலைத் திட்டம் |

| | | |
|---|---|---|
| தகுதி | : | நகர்புறத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள், பெண்கள், ஆதி-திராவிட மற்றும் பழங்குடி இனம் ஊனமுற்றோர்க்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். |
| அணுகவேண்டிய முகவரி | : | சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளர் அவர்கள் |

### 3. பொன்விழா ஆண்டு கிராமபுறச் சுயவேலை வாய்ப்புத் திட்டம் (SGSY)

| | | |
|---|---|---|
| தகுதி | : | கிராமப்புறத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர் |
| பயன் பெறுபவர்கள் | : | தனிநபர் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் |
| உதவிகள் மற்றும் அதன் வரம்பு | : | சுழல் நிதி ரூபாய் 25000<br>பொருளாதார கடன் ரூபாய் 3 லட்சம் |
| மானியம் | : | ரூபாய் 1.25 லட்சம் |
| அணுக வேண்டிய முகவரி | : | சம்மந்தப்பட்ட ஊரக வளர்ச்சி முகமை<br>ஊராட்சி அலுவலர் |

### 4. மகளிர் திட்டம் ஸ்ரீ தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் (MATHI)

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | 1. கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைப் பெண்களைச் சுய உதவிக்குழுக்கள் மூலம் சமூகப் பொருளாதார மேம்பாடும் சுய சார்புத் தன்மையும் அடையச் செய்வது.<br>2. வறுமையை மகளிர் மூலம் குறைத்தல்<br>3. வறுமையை அழிப்பதற்குச் சுய உதவித்தொகை குழுக்களைப் பயனுள்ள கருவியாகப் பயன்படுத்துவது<br>4. இல்லாதோரை இருப்போர் ஆக்குவது |
| உதவி பெறுவோர் | : | ஒரே பகுதியில் வசிக்கும் ஒருமித்த கருத்துடைய 12 லிருந்து 20 ஏழைப்பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்து உருவாக்கப்படும் சுய உதவிக்குழு. |
| அணுக வேண்டிய முகவரி | : | அங்கீகரிப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மாவட்டத் திட்டச் செயலாக்க அலகு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம். |

**5. ராஜராஜேஸ்வரி மகளிர் நலக் காப்பீட்டுத் திட்டம்**

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | மகளிர் பொருளாதரப் பாதுகாப்பு |
| உதவி பெறுவோர் | : | 10-75 வயது வரையிலான எந்த மகளிரும் காப்பீடு பெறலாம். |
| உதவியின் வகை | : | ஆண்டுதோறும் ரூபாய் 15 பிரிமியம் காப்பீட்டுத் தொகை ரூபாய் 25000 |
| அணுக வேண்டிய முகவரி | : | சம்பந்தப்பட்ட இந்தியப் பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் (தி ஓரியன்டல் இன்சூரன்ஸ், யுனைடேட் இன்சூரன்ஸ், நேஷனல் இன்சூரன்ஸ், நியூ இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனங்கள்) |

**6. முதியோர், விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் உதவித் தொகைத் திட்டம்**

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | முதியோர், விதவை, கணவரால் கைவிடப்பட்டோருக்கான பொருளாதாரப் பாதுகாப்பு |
| தகுதி | : | முதியோர். விதவை, கணவரால் கைவிடப்பட்டோருக்கான சான்றிதழ் |
| உதவி | : | மாதந்தோறும் ரூபாய் 200 மற்றும் இலவச அரிசி, சேலை, வேஷ்டி |
| அணுக வேண்டிய முகவரி | : | சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். |

# சமூகநலத் திட்டங்கள்

## 1. தமிழக அரசு பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| தகுதிகள் | : | 1. தாய்க்கு 35 வயதிற்குள் இருக்க வேண்டும்.<br>2. வருட வருமானம் (2 குழந்தைகள் இருந்தால்) ரூபாய் 12000க்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு குழந்தை இருந்தால் ரூபாய் 5000க்குள் இருக்க வேண்டும்.<br>3. தாய் கருத்தடை செய்யும் போது குழந்தைக்கு 1 வயதிற்குள் இருக்க வேண்டும்.<br>4. விண்ணப்பம் அளிக்கும் போது குழந்தையின் வயது 1க்குள் இருக்க வேண்டும்<br>5. 20 ஆண்டுகள் நிறைவு அடைந்த பின் முழுமையான தொகை பெற இயலும் |
| அளிக்கப்படும் உதவித்தொகை | : | குறிப்பு : இரு குழந்தைகளின் பெயரிலும் தலா ரூ. 15,200 வீதம் வைப்புத்தொகை ரசீதும், ஒரே குழந்தையாயின் ரூ. 22,200 வைப்புத் தொகை ரசீதும் வழங்கப்படும். |
| அணுகவேண்டிய முகவரி | : | சம்பந்தப்பட் வட்டாட்சியர் அலுவலகம், சமூக நல விரிவாக்க அலுவலர்கள், நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர், மாவட்டச் சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அவர்கள் |

## 2. இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| தகுதிகள் | : | 1. 20 வயது நிறைவடைந்ததும் 40 வயதிற்குட்பட்டும் இருக்க வேண்டும்.<br>2. விதவை, கணவரால் கைவிடப் பட்டவர் மற்றும் ஊனமுற்றோர் தையல் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.<br>3. ஆண்டு வருமானம் ரூ. 12000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

அளிக்கப்படும்
உதவித்தொகை : தையல் இயந்திரம் (ஒன்று)

அணுகவேண்டிய முகவரி : ஊராட்சி ஒன்றிய ஆணையர்
சமூக நல விரிவாக்க அலுவலர்கள்,
நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்,
மாவட்ட சமூக நல அலுவலர்

**3. வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டம்**

தகுதிகள் :

1. 01.10.2001 அன்று 20 வயது நிறைவடைந்தவர்களாக (பெண்) இருக்கவேண்டும்
2. மணமகளின் தாயக்கு 18 வயது நிறைவு பெற்ற ஆண் மகன் இருத்தல் கூடாது.
3. தந்தை இறந்ததற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
4. பயனாளிக்குக் கல்வித் தகுதி ஏதுமில்லை
5. திருமணத்திற்கு முன்பு விண்ணப்பம் அளிக்கப்பட வேண்டும்.
6. 20 லிருந்து 30 வயதிற்குள் விண்ணப்பிக்கலாம்.

அளிக்கப்படும் உதவித்தொகை : ரூ. 10000 (காசோலையாக)

அணுகவேண்டிய முகவரி : நகராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஆணையர்
சமூக நல விரிவாக்க அலுவலர்கள்,
நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்,
சத்துணவு மேற்பார்வையாளர், மாவட்டச் சமூக நல அலுவலர்

**4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்**

தகுதிகள் :

1. 01.10.2001 அன்று 20 வயது நிறைவடைந்தவர்களாக இருக்கவேண்டும்

2. திருமணம் முடிந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பம் அளிக்கலாம்.
3. 20 லிருந்து 30 வயதிற்குள் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.
4. மணமகனுக்கு முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.
5. வருமான வரம்பு இல்லை

| | | |
|---|---|---|
| அளிக்கப்படும் உதவித்தொகை | : | ரூ. 7000 தேசிய சேமிப்புப் பத்திரம்<br>ரூ. 3000 (காசோலையாக) |
| அணுகவேண்டிய முகவரி | : | ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஆணையர்<br>சமூக நல விரிவாக்க அலுவலர்கள்,<br>நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்,<br>சத்துணவு மேற்பார்வையாளர், மாவட்டச் சமூக நல அலுவலர் |

**5. தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதி உதவித் தொகை**

தகுதிகள் :

1. மணமகளுக்கு 20 வயது நிறைவு அடைந்திருக்க வேண்டும்.
2. திருமணம் நடைபெற்று 2 ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
3. சாதிச்சான்று மணமகள், மணமகன் இருவருக்கும் தனித் தனியாக இணைக்கப்பட வேண்டும்.
4. இருப்பிடச்சான்று அளிக்கப்பட வேண்டும் (தனித் தனியாக)
5. வருமான வரம்பு இல்லை

| | | |
|---|---|---|
| அளிக்கப்படும் உதவித்தொகை | : | 1. ரூ. 10000 (தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ. 7000 மற்றும்)<br>காசோலையாக ரூ. 3000 |
| அணுகவேண்டிய முகவரி | : | ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஆணையர்<br>சமூக நல விரிவாக்க அலுவலர்கள்,<br>நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்,<br>சத்துணவு மேற்பார்வையாளர், மாவட்டச் சமூக நல அலுவலர் |

## 6. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதி உதவித் திட்டம்

| | | |
|---|---|---|
| தகுதிகள் | : | 1. மணமகள் தாய் தநதை இருவரும் இல்லாதவராக இருத்தல்வேண்டும்.<br>2. தாய், தந்தை, இறந்ததற்கான சான்று அளிக்கப்பட வேண்டும்.<br>3. 20 லிருந்து 30 வயதிற்குள் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.<br>4. கல்வித் தகுதி தேவையில்லை.<br>5. பாதுகாவலர் அல்லது உறவினரின் ஆண்டு வருமானம் ரூ. 12000க்குள் இருக்க வேண்டும்.<br>6. திருமணத்திற்கு முன்பு 15 நாட்களுக்குள் விண்ணப்பம் அளிக்க வேண்டும். |
| அளிக்கப்படும் உதவித்தொகை | : | ரூ. 7000 தேசிய சேமிப்புப் பத்திரம்<br>ரூ. 3000 (காசோலையாக) |
| அணுகவேண்டிய முகவரி | : | ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஆணையர்<br>சமூக நல விரிவாக்க அலுவலர்கள்,<br>நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்,<br>சத்துணவு மேற்பார்வையாளர், மாவட்டச் சமூக நல அலுவலர் |

## 7. சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகம் (ம) அரசுத் தொடக்கப் பள்ளி, திண்டுக்கல்

| | | |
|---|---|---|
| நோக்கம் மற்றும் தகுதிகள் | : | 6 லிருந்து 18 வயது வரையிலுள்ள ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் குழந்தைகளுக்கு இலவச உணவு உடை மருத்துவ வசதி, உறைவிடம் அளிப்பதின் மூலம் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட சிறுவர்களுக்குக் கல்வி அளித்தல்<br>1. தாய், தந்தை இல்லாததற்கான சான்று<br>2. தொழு நோய் பாதிக்கப்பட்ட பெற்றோர்களுக்கான சான்று<br>3. தாய் (அ) தந்தைக்கு (அ) பாதுகாவலருக்கு ஆண்டு வருமானம் ரூ. 12000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>4. வேறு பள்ளிகளில் படித்ததற்கான மாற்றுச் சான்று |

5. பெற்றோர்கள் இருவரும் இல்லாத குழந்தைகள் மேல் படிப்பிற்காக 22 வயது வரை அனுமதிக்கப்படுகிறார்கள்.

6. ஆயுள் கைதியின் குழந்தைகளும் சேர்க்கப்படுவர்

| | | |
|---|---|---|
| அணுகவேண்டிய அலுவலர் முகவரி | : | மாவட்ட சமூக நல அலுவலர்<br>ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஆணையர்<br>சமூக நல விரிவாக்க அலுவலர்கள் |

**8. தொட்டில் குழந்தைத் திட்டம்**

| | | |
|---|---|---|
| தகுதிகள் | : | மருத்துவமனைகளிலோ, தெரு ஓரத்திலோ, அல்லது பொது இடங்களிலோ ஆதரவற்ற நிலையில் கைவிடப்பட்ட குழந்தைகள் |
| அளிக்கப்படும் உதவித்தொகை | : | குழந்தையின் பொறுப்பை அரசே ஏற்கும் |
| அணுகவேண்டிய அலுவலர் முகவரி | : | 1. தொட்டில் குழந்தை வரவேற்பு மையம், தலைமை மருத்துவமனை<br>2. தொட்டில் மையம், மாவட்டத்திலுள்ள அனைத்து ஆரம்பச் சுகாதார நிலையங்கள், பொது மருத்துவமனைகள்.<br>3. அருகில் உள்ள காவல் நிலையம்<br>4. மாவட்ட ஆட்சித் தலைவர்<br>5. மாவட்ட சமூக நல அலுவலர்<br>6. புகைவண்டி நிலையம், தொட்டில் மையம்<br>7. காமராஜர் பேருந்து நிலையம்<br>8. நகராட்சி<br>9. கஸ்தூரிபா மருத்துவமனை, சின்னாளப்பட்டி |

## 9. குழந்தைகளைத் தத்து எடுத்தல்

தகுதிகள் : 1. தத்தெடுக்கும் பெற்றோர்களின் மொத்த வயது 90க்குள் இருக்க வேண்டும்.

2. பெற்றோரில் ஒருவர் 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். இவர்கள் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்ளலாம்.

3. வயதான தம்பதிகளுக்கு வயது அதிகமுள்ள குழந்தைதான் தத்துக் கொடுக்கப்படும்.

4. தனிப்பட்ட ஆணோ, பெண்ணோ அல்லது முறையாக விவாகரத்துச் செய்தவர்கள் தத்து எடுக்க விரும்பினால் அவர்களது வயது 30ம் அதற்கும் மேலும் இருக்க வேண்டும்.

5. தத்து எடுக்கும் பெற்றோருக்கும், குழந்தைக்கும் குறைந்தது 21 வயது வேறுபாடு இருக்க வேண்டும்.

6. கல்வித் தகுதி தேவையில்லை.

7. இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் தத்து எடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம் 1956ன்படி தத்து எடுக்கலாம்.

8. இந்து மதத்தைச் சாராதவர், பாதுகாப்பாளர் என்ற பெயரில் தத்து எடுக்கலாம்.

9. தத்து எடுத்துக் கொள்ளும் அரசு அலுவலர்களுக்கு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்குச் சிறப்பு விடுப்பு அளிக்கப்படுகிறது

அணுகவேண்டிய அலுவலர் முகவரி : நிர்வாக அறங்காவலர்
கஸ்தூரிபா மருத்துவமனை, சின்னாளப்பட்டி

## 10. சிறப்புத் திட்டம் : தையல் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள், எழுது பொருள் தயாரிப்பு மற்றும் மகளிர் கூட்டுறவுச் சங்கம்

| | | |
|---|---|---|
| நிபந்தனைகள் மற்றும் தகுதிகள் | : | சங்க உறுப்பினர்களாகச் சேருவதற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மகளிர், ஆதரவற்றவர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் ஆகியோர் தகுதியுடையவர் ஆவர். |
| அளிக்கப்படும் உதவித்தொகை | : | இலவச சீருடைத் திட்டத்தின் சீருடைகள் சங்கங்களின் மூலம் உறுப்பினர்களுக்குத் தைக்கும் வேலை அளிக்கப்பட்டு, அதற்கான தையற் கூலி வழங்கப்படுகிறது. எழுதுபொருள் சங்கங்கள் மூலம் உறுப்பினர்களுக்கு பைண்டிங் வேலை வழங்கப்படுகிறது. |
| அணுகவேண்டிய முகவரி | : | மாவட்டச் சமூக நல அலுவலர்கள் |

# தாட்கோ

## வளர்ச்சித் திட்டங்கள்

### ஆதிதிராவிட / பழங்குடியின மகளிருக்கான வேளாண் நிலம் வாங்கும் திட்டம்

## திட்ட அம்சங்கள்

### இத்திட்டத்தில் 4 இனங்கள் உள்ளன

- ***நிலம் வாங்குதல் :*** *இத்திட்டத்தில் பயனாளிகள் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் அல்லது 2.50 ஏக்கர் நன்செய் நிலம் சொந்தமாக வாங்கலாம்.*
- ***நிலஅபிவிருத்தி :*** *நில அபிவிருத்தி, நிலத்தை சமன்படுத்துதல், கரைகள் அமைத்தல் போன்ற பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளலாம்.*
- ***நீர்ப்பாசன வசதி :*** *நிலங்களுக்கு தேவையான ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல் போன்ற நீர்ப்பாசன வசதி செய்தல், மின் மோட்டார் வாங்குதல்.*
- ***கால்நடை வளர்ப்பு :*** *ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்றவற்றை உபதொழில்களாகச் செய்யலாம்.*
- *நிலம் வாங்குதல், நில அபிவிருத்தி, பாசன வசதி, கால்நடை வளர்ப்பு ஆகிய அனைத்து இனங்களையும் அல்லது அவர்களுக்குத் தேவையான இனங்களை மட்டும் பயனாளிகள் தங்களது விருப்பப்படி தேர்வு செய்யலாம்.*

- முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் 75 சதவிகிதம் விலக்கு அளிக்கப்படும். மீதமுள்ள 25 சதவிகித கட்டணமும் கடனில் சேர்க்கலாம்.

- பயன்பெறும் பயனாளிகளுக்கு முன்னுரிமை மற்றும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் விவசாயமின் இணைப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

- வேளாண் தோட்டக்கலை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளின் நலத்திட்ட உதவிகளையும் இத்திட்டப் பயனாளிகள் பெறலாம். அதிக வருவாய் தரத்தக்க பயிர்களை சாகுபடி செய்ய துறை அலுவலர்களால் தொடர்ந்து ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்கப்படும்.

## நிதி உதவிகள் :

| | |
|---|---|
| விவசாய நிலம் வாங்குவதற்கு மட்டும் (அதிக பட்சமாக) | ரூ. 1.00 இலட்சம் |
| நில அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கால்நடை வளர்ப்பு (அதிக பட்சமாக) | ரூ. 1.00 இலட்சம் |
| மொத்தம் (அதிக பட்சமாக) | ரூ. 2.00 இலட்சம் |
| தாட்கோ மான்யம் | 50% |
| வங்கிக் கடன் | 50% |
| பயனாளிகளின் பங்குத் தொகை | இல்லை |

## தகுதிகள் மற்றும் வழி முறைகள் :

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 18 வயதுக்கு மேல் 55 வயதுக்குட்பட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிருக்காக மட்டும்.

- நிலமற்ற விவசாயக் கூலி / சிறு / குறுவிவசாயி ஆக இருக்க வேண்டும்.

- ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை

❖ நிலமற்ற விவசாயகளுக்கு முன்னுரிமை

❖ வாங்க விரும்பும் நிலத்தினை பயனாளியே தேர்வு செய்து நிலச் சொந்தக்காரருடன் விலை பேசி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

❖ வாங்க உத்தேசித்துள்ள நிலத்தினை சந்தை மதிப்பீட்டிற்கு விலை பேசிய போதிலும், தாட்கோவின் 50% மான்யம், நிலத்தின் சார்பதிவாளர் அலுவலக (and) வழிகாட்டி பதிவேட்டின் மதிப்பீடு அல்லது சந்தை மதிப்பீடு, இதில் எது குறைவோ அதன் அடிப்படையில் வழங்கப்படும்.

❖ அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) மூலம் இலவசமாக பெற்றுப் பூர்த்தி செய்து

அ) சாதிச் சான்றிதழ் ஆ) வருமானச் சான்றிதழ்

இ) குடும்ப அட்டை நகல் ஈ) வாங்க உத்தேசித்துள்ள நிலக்கிரைய உடன்படிக்கை

உ) வில்லங்க சான்றிதழ் மற்றும் ஊ) கணினி சிட்டா அடங்கல்

ஆகியவற்றுடன் மாவட்ட மேலாளர் அலுவலகத்திலோ அல்லது ஆதி திராவிடர் நல விரிவாக்க அலுவலரிடமோ சமர்பிக்க வேண்டும்.

❖ பயனாளிகள் தகுதி மற்றும் திட்ட முன்மொழிகள் பொருளதார நிலைப்பாடு ஆகியவற்றுடன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்படுவார்கள்.

## ஆதிதிராவிட / பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார நிதி உதவித் திட்டம்

# திட்ட அம்சங்கள்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிட / பழங்குடியின மகளிர் மட்டும் உள்ளடக்கிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வருவாய் ஈட்டக்கூடிய எந்த ஒரு சுய தொழிலையும் சொந்தமாகத் தொடங்க நிதியுதவி செய்யப்படும்.

### நிதி உதவி:

| | |
|---|---|
| அலகுத் தொகை (அதிக பட்சம்) | ரூ. 7.50 இலட்சம் |
| தாட்கோ மானியம் 50% (அதிக பட்சமாக) | ரூ. 2.50 இலட்சம் |
| குழுவின் பங்குத் தொகை | ரூ. 2.50 இலட்சம் |
| திட்டங்களுக்கு | இல்லை |
| ரூ. 2.50 இலட்சத்திற்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு | 5% |
| வங்கிக் கடன் | எஞ்சியுள்ள தொகை |

### தகுதிகள் மற்றும் வழி முறைகள் :

- 12 முதல் 20 உறுப்பினர்கள் கொண்ட இந்து ஆதி திராவிட / பழங்குடியின, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்படாத மகளிர் சுய உதவிக்குழுவாக இருத்தல் வேண்டும்.

- குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன் ஏற்படுத்தப்பட்டு தர நிர்ணயம் செய்யப்பட்ட குழுவாக இருத்தல் வேண்டும்.

❖ நிதியுதவி கோரும் குழுக்கள் தங்களது விண்ணப்பங்களை முறையாக பூர்த்தி செய்து சாதிச் சான்றிதழ்கள் மற்றும் திட்ட அறிவிக்கையுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக திட்ட அலுவலர் மூலமோ (அ) நேரடியாகவோ தாட்கோ மாவட்ட மேலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி**

## திட்ட அம்சங்கள்

குழு உறுப்பினர்களின் ஆற்றலை மேம்படுத்த, குழு ஆரம்பித்து 6 மாதங்களுக்குப் பிறகு, முதலாவதாக நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிட / பழங்குடியின மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ. 10,000 தாட்கோ மானியம் மற்றும் ரூ. 15,000 வங்கிக்கடன் ஆக மொத்தம் ரூ. 25,000 சுழல் நிதியாக வழங்கப்படும்.

### தகுதிகள் மற்றும் வழி முறைகள் :

❖ ஆதி திராவிட / பழங்குடியின மகளிர் மட்டும் உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்களாக இருத்தல் வேண்டும்.

❖ தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குழுக்களுக்கும் மற்றும் அங்கீகரிக்கப்படாத சுய உதவிக்குழுக்களுக்கும் வழங்கப்படும்.

❖ குழு ஆரம்பித்து 6 மாதங்களுக்குப் பிறகு, முதலாவதாக தர நிர்ணயம் செய்யப்பட்டு, சுழல் நிதிக்குத் தகுதி வாய்ந்த குழுவாக இருத்தல் வேண்டும்.

❖ தகுதி வாய்ந்த குழுக்கள், தங்களது விண்ணப்பங்களை மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலமோ (அ) நேரடியாகவோ தாட்கோ மாவட்ட மேலாளர்களிடமோ அல்லது ஆதிதிராவிடர் நல விரிவாக்க அலுவலரிடமோ சமர்ப்பிக்கலாம்.

## தனிநபர் கடன் திட்டம்

# திட்ட அம்சங்கள்

*வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிட/பழங்குடியின மக்களுக்கு வருவாய் ஈட்டக்கூடிய எந்த ஒரு சுய தொழிலையும் துவங்க தனி நபர் கடனுதவி வழங்கப்படும்.*

**நிதி உதவி:**

| | |
|---|---|
| அலகுத் தொகை (அதிக பட்சம்) | ரூ. 7.50 இலட்சம் |
| தாட்கோ மான்யம் | 30% அல்லது அதிக பட்சமாக ரூ. 25,000/- |
| பயனாளியின் பங்குத் தொகை | திட்டத் தொகையில் 5% |
| வங்கிக் கடன் | 65% அல்லது எஞ்சியுள்ள தொகை |

**தகுதிகள் மற்றும் வழி முறைகள் :**

- *விண்ணப்பதாரர் 18 வயது முடிந்தவராகவும் 55 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.*
- *குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறமாக இருப்பின் ரூ. 18,460/- அல்லது நகர்ப்புறமாக இருப்பின் ரூ. 28,536/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.*
- *விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.*

  *1. குடும்ப அட்டை நகல் அல்லது வட்டாட்சியரிடம் பெறப்பட்ட இருப்பிடச் சான்றிதழ்* (Ration Card (or) Nativity Certificate) *2. விலைப்பட்டியல்* (Quotation) TNGST/CSTNo.) *இருக்க 3. சாதிச்சான்றிதழ் நகல்* (Attested Copy) *4. குடும்ப ஆண்டு வருமானச் சான்று நகல்* (Attested Copy)

❖ விண்ணப்பப்படிவம் தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகம் அல்லது ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல விரிவாக்க அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் மேலே கண்ட ஆவணங்களுடன், விண்ணபதாரர் கிராமப்புறமாக இருந்தால் பஞ்சாயத்து கிராம சபையின் பரிந்துரையுடன் விரிவாக்க அலுவலர் (ஆதி திராவிட நலம்) அல்லது தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

❖ பெறப்படும் விண்ணப்பங்கள் ஒன்றியம் வாரியாகப் பிரிக்கப்பட்டு, ஒன்றிய அளவிலான தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட கடன் வழங்கும் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். வங்கிகளின் ஒப்புதல் பெற்ற விண்ணப்பங்களுக்கு தாட்கோ மானியத்துடன் கூடிய கடனுதவி சம்பந்தப்பட்ட வங்கிகளால் வழங்கப்படும்.

**ஆதி திராவிட / பழங்குடியின இளைஞர்களுக்கான**
**சுயவேலைவாய்ப்புத் திட்டம்**

## திட்ட அம்சம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்டத்திற்கு ஏற்ற தகுதி வாய்ந்த சுய வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டங்களை தேர்வு செய்து பின்பு, தகுதி வாய்ந்த இளைஞர்களை விளம்பரம் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆதி திராவிட / பழங்குடியின இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்கிடத் தேவையான பயிற்சியுடன், கடனுதவி வழங்கப்பட்டு விரிவான வழிகாட்டுதல் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

### திட்டப் பயன்கள்

❖ ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்டத்திலுள்ள ஏற்ற தகுதியுடைய சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் மாவட்ட ஆட்சியரால் அடையாளம் கண்டறியப்படும்.

❖ ஒவ்வொரு தொழிலுக்கும் தகுதி வாய்ந்த இளைஞர்கள் தேர்வு செய்யப்படுவர்.

❖ இலவச தொழிற்பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும்.

❖ கடன் வழங்கிய பின்னர், 6 மாத காலத்திற்கு வணிக வாய்ப்புகளுக்கு உதவி புரிதல், தொழில் நுட்ப உதவி அளித்தல் மற்றும் வழிகாட்டுதல் போன்றவை இலவசமாக மேற்கொள்ளப்படும்.

**நிதி உதவி:**

| | |
|---|---|
| அலகுத் தொகை (அதிக பட்சம்) | ரூ. 7.50 இலட்சம் |
| தாட்கோ மான்யம் | 30% அல்லது அதிக பட்சமாக ரூ. 25,000/- |
| பயனாளியின் பங்குத் தொகை | 5% |
| வங்கிக் கடன் | 50% அல்லது எஞ்சியுள்ள தொகை |

## தகுதிகள் மற்றும் வழி முறைகள் :

❖ ஆதிதிராவிட / பழங்குடியின 18-35 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக இருக்க வேண்டும்.

❖ தேர்வு செய்யப்படும் தொழிலுக்கேற்ப கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

❖ ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் திட்டங்கள் குறித்து நாளிதழ்களில் விரிவான விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்படும்.

❖ மாவட்டத் தேர்வுக்குழு மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து தகுதி வாய்ந்த பயனாளிகள் ஒவ்வொரு திட்டத்திற்கும் தேர்வு செய்யப்படுவார்கள்.

# 5. சிறப்பு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (Special Economic Projects)

## திட்ட அம்சங்கள்

- மாவட்ட அளவில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மாவட்ட ஆட்சியாளரால் மாவட்டத்தின் குறிப்பிட்ட பகுதிகளை கண்டறிந்து, அப்பகுதியின் தன்மைக்கேற்ப வருவாய் ஈட்டக்கூடிய தொழில்கள் கண்டறியப்பட்டு தங்கு தடையின்றி தொழில் புரிய நிதி உதவி உட்படத் தேவையான அனைத்து உதவிகளும் தாட்கோ மூலம் வழங்கப்படும்.
- இச்சிறப்பு பொருளாதார திட்டங்கள் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழுவினரால் செலுத்தப்படும்
- காலவரையற்ற திட்டம் வடிவமைப்பில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும். குறிப்பிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின் குடும்பங்களுக்கு, அப்பகுதியின் தன்மைக்கேற்ப வருவாய் ஈட்டக்கூடிய தொழில் புரிய அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.
- சிறப்புப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்டு (Formulate) அவரது தலைமையில் செயல்படும் திட்ட செயலாக்கக்குழு (Project Implementation Team) மூலம் நேரடியாகச் செயல்படுத்தப்படும்.

# 6. துப்புரவு பணியாளர் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் (SUBAMATHI)

- மனிதக் கழிவுகளை அகற்றும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய, மாற்றுத் தொழிலுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.
- ரூ. 50.000/- வரையில் நிதி உதவி ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்குதல்.
- திட்ட மதிப்பீட்டில் 30 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 10.000/ தாட்கோ & NSRLS மான்யமாக வழங்குதல்.
- மீதமுள்ள திட்ட மதிப்பீட்டுத் தொகை NSKFDC / வங்கி பருவக்கடனாக தாட்கோவால் வழங்குதல்
- துப்புரவு பணியாளர்கள் மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு மாற்றுத் தொழிலாக அமைக்கூடிய அனைத்துத் திட்டங்களுக்கும் நிதி உதவி வழங்குதல்

## தகுதிகள் மற்றும் வழிமுறைகள்

- மனித கழிவை அகற்றும் துப்புரவுத் தொழிலாளர்கள் அல்லது அவரைச் சார்ந்தவர் என்ற சான்றிதழ் அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படும்.
- பயனாளிகள், வருவாய் கோட்டாட்சியர் தலைமையிலான தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்படுவார்கள்.

# 7. தேசிய சுகாதாரப் பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டம் (NSKFDC)

## திட்ட அம்சங்கள்

இத்திட்டத்தின் கீழ் சுகாதாரப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு வருவாய் ஈட்டக்கூடிய தொழிலை சொந்தமாகத் தொடங்க, தனிநபர் கடனுதவி வழங்கப்படும்.

## நிதி உதவி

| | |
|---|---|
| அலகுத் தொகை (அதிகபட்சம்) | ரூ. 5.00 இலட்சம் |
| தாட்கோ மான்யம் | 30% அல்லது அதிகபட்சம் ரூ. 25.000/ |
| பயனாளியின் பங்குத்தொகை ரூ. 2.00 இலட்சத்துக்கு மேற்பட்ட திட்டங்களுக்கு | 5% |
| என். எஸ்.கே. எப்.டி.சி பருவக் கடன் | எஞ்சியுள்ள தொகை |
| ரூ. 50,000/ க்கு கீழ் உள்ள திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் | |

## தகுதிகள் மற்றும் வழிமுறைகள்

- விண்ணப்படிவங்கள் தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் இலவசமாக வழங்கப்படும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட மேலாளர் அலுவலத்தில் சமர்ப்பபிக்க வேண்டும்.
- சுகாதாரப் பணியாளர்கள் அல்லது அவரைச் சார்ந்தவர் என்ற சான்றிதழின் அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படும்.
- பயனாளிகள் வருவாய் கோட்டாட்சியர் தலைமையிலான தேர்வுகுழுவால் தேர்வு செய்யப்படுவார்கள்.

# 8. ஆதி திராவிட / பழங்குடியின் இளைஞர்களுக்கான இலவச தொழிற் பயிற்சித் திட்டம்

## திட்ட அம்சம்

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெறக்கூடிய திறனை பெருக்கிடும் வகையில் சுயதொழில் துவங்கிடவும் மற்றும் அவர்களது தொழில் நுட்பத்திறனை மேம்படுத்தவும் பல்வேறு தொழிற் பயிற்சிகள் எல்லா மாவட்டங்களிலும் அளிக்கப்படுகின்றன.

## தகுதிகள் மற்றும் வழிமுறைகள்

- பயிற்சிக் கட்டணம் முழுவதும் தாட்கோவால் பயிற்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு மாணவர்களுக்கு இலவசமாகப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- பயிற்சியாளருக்கு மாதரந்திர உதவித் தொகை ரூ. 400/ வழங்கப்படும்
- இப்பயிற்சியின் கால அளவு 3 மாதம் 1 வருடம் வரையாகம்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்டத்தின் உள்ளாற்றல் மற்றம் தேவைக்கேற்ப தொழிற் பயிற்சிகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்ட தொழிற்பயிற்சி தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப்படும்.
- மாநில / மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனங்களில் மட்டுமே உடனடியாக வேலை வாயப்பினைத் தரத்தக்க பயிற்சிகள் நடத்தப்படும்
- உதாரணமாக செவிலியர் பயிற்சி, ப்ளாஸ்டிக் ப்ராஸஸிங் டெக்னாலஜி, ஓட்டல் மேனேஜ்மெண்ட் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி, கணினி மென்பொருள் மற்றும் வானொலி / தொலைக்காட்சி / செல்போன் பழுது பார்த்தால், ஓட்டுநர் பயிற்சி, தோல் பொருட்கள் / காலணிகள் உற்பத்தி, ஆடை வடிவமைப்பு, கனரக

வாகனங்கள் ஓட்டுதல், மோட்டார் மெக்கானிசம், மின்சாதனங்கள் பழுது பார்த்தல், வெல்டிங் மற்றும் சாலிடரிங், தையல் பயிற்சி மற்றும் தட்டச்சு மற்றும், கருக்கெழுத்துப் பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள தாட்கோ மாவட்ட மேலாளர்களால் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு பயிற்சிக்கான விண்ணப்பங்கள் ஜுன்/ஜீலை மாதம் வரவேற்கப்படும்.
- பயிற்சி பெற விரும்பும் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர்களை அணுகவும்.
- பயிற்சி முடிந்த பின்னர் சொந்தமாக தொழில் தொடங்க விரும்பும் பயிற்சியாளர்களுக்கு அவரவர் தொழிலுக்குத் தக்கவாறு நிதி உதவி அளிக்கப்படும்.

# 9. மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதித் திட்டம்

## திட்ட அம்சங்கள்

- அரசின் மூலம் அளிக்கப்படும் எந்தவொரு திட்டத்திலும் பயன்பெற இயலாத, பொருளாதார அளவில் மிகவும் நலிவடைந்த ஏழை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின் மக்கள் மாவட்ட ஆட்சியரால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டு 100% மான்யமாக வருவாய் ஈட்டும் வகையில் சுய தொழில் தொடங்க மாவட்ட ஆட்சியரால் நேரடி உதவி அளிக்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் விரும்பும் வருவாய் ஈட்டக்கூடிய தொழில் புரிய ரூ. 1,00,000/ வரை மதிப்புள்ள உரிய சொத்து / உபகரணங்கள் 100% இலவசமாக வழங்கப்படும்.

❖ இத்திட்டத்தின் கீழ் கொத்தடிமைகள், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டோர், விதவைகள், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் போன்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## தாட்கோ பயனாளிகள் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள்

❖ தாட்கோ திட்டத்தில் பயனடைய விரும்பும் பயனாளிகள் தங்களது மாவட்டத்திலுள்ள தாட்கோ மாவட்ட மேலாளர் அல்லது சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகத்திலுள்ள ஆதிதிராவிடர் நல விரிவாக்க அலுவலரை அனுமதி கடன் பெற விரும்பும் திட்டத்திற்காக விண்ணப்பத்தினை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

❖ விண்ணப்பப் படிவத்தில் கோரியுள்ள அனைத்து விவரங்களையும் உரிய முறையில் பூர்த்தி செய்து, முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் மாவட்ட மோலாளர் அலுவலகத்திலோ அல்லது வட்டார வளர்ச்சி அலுவலகத்திலுள்ள ஆதி திராவிடர் நல விரிவாக்க அலுவலரிடமோ நேரடியாக அளித்து ஒப்புதல் சான்றினை விண்ணப்பதாரர் பெறுதல் வேண்டும்.

## மாவட்டத் தொழில் மையம்

*கோவை மாவட்ட தொழில் மைய அலுவலகம் சிறு தொழில் தொடங்க ஆர்வமிக்க தொழில் முனைவோர்களுக்கு ஒரு குடையின் கீழ் அனைத்து உதவிகளையும் அளித்து வருகிறது.*

## மாவட்ட தொழில் மையத்தின் செயல்பாடுகள்

1. *ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தி தொழில் துவங்க வழிவகை செய்தல்.*
2. *குறு. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன வளர்ச்சிச் சட்டம் 2006ன் படி பகுதி I & II ன் கீழ் நிறுவன பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புகை வழங்குதல், இவற்றிற்கான கோரிக்கை மனுக்களை அந்தந்த மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*
3. *தொழில் முனைவோர்களுக்கு தொழில் நுட்பத் தகவல் மற்றும் திட்ட அறிக்கைகள் அளித்தல்.*
4. *ஒற்றைச்சாளர இடர் நீக்க குழுக்கூட்டம் நடத்தி சிறு தொழில் நிறுவனங்களுக்கு அரசு உரிமங்கள் பெற்றுத்தருதல்.*
5. *பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கிக் கடன் பெற்று தொழில் துவங்க ஆவண செய்தல்.*
6. *அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டத்தின் கீழ் அறுவடைக்கு பின்பான வேளாண் சார்ந்த மற்றும் உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல் உள்ளிட்ட தொழில்களைத் துவங்க மானியத்துடன் கூடிய கடன் பெறுதல்.*
7. *சிறு தொழில் நிரந்தர சான்று பதிவு செய்தல்.*
8. *குடிசைத் தொழில் நிரந்தர சான்று பதிவு செய்தல்.*

9. கைவினைத் தொழில் நிரந்தர சான்று பதிவுசெய்தல்.

10. மண்டலத் தொழில் வசதியமைப்பு குழு தொழில நிறுவனங்களுக்கு பணப்பட்டுவாடா பெற்றுத் தருதல்.

11. தேசிய மூலதன நிதிக்கடன் பெற்று தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கல் செய்யும் பொருட்டும் காலக்கடன்கள் பெறுதல், தரச்சான்று பெறுதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மூலம் அறிவுசார்ந்த கண்டு பிடிப்புகளின் காப்புரிமை பதிவு செய்தல் ஆகியவற்றிற்கான பின்முனை வட்டி மானியம் பெற வழிவகை செய்தல்.

12. ஏற்றுமதி வழிகாட்டு காலத்தின் வாயிலாக ஏற்றுமதி சந்தை வாய்ப்புகளை தொழில் முனைவோர்களுக்கு அளித்தல்.

13. தொகுப்பு வளர்ச்சி, கிராமிய தொகுப்பு வளர்ச்சி, தனியார் மற்றும் பொதுத்துறை ஏற்றுமதிக்கான விருது வழங்குதல் பொருட்டுச் செயல்படுத்துதல்.

14. தகுதி வாய்ந்த சிறுதொழில் நிறுவனங்களுக்கு மானியம் அளித்தல்.

15. குறிப்பிட்ட பொருட்காட்சியில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு மானியம் அளித்தல்

16. நலிவுற்ற சிறு தொழில நிறுவனங்களை புணரமைப்பு செய்தல்.

17. சிட்கோ, என்.எஸ்.ஐ.சி வாயிலாக தொழில் துவங்க மனை, தொழிற்கூடம் மற்றும் இயந்திரங்களை வாங்க பரிந்துரைத்தல்.

18. காதி கிராமத் தொழில் ஆணைய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மான்யத்துடன் கூடிய வங்கி கடன் பெற்று தொழில் துவங்க ஆவன செய்தல்.

19. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், தேசிய சிறுதொழில் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி லிட்., உள்ளிட்ட நிதி நிறுவனங்கள் வாயிலாக தொழில் துவங்குவதற்கான கடன்வசதிக்கு பரிந்துரைத்தல்.

# மாவட்ட அளவில் ஆரம்பிப்பதற்கு ஏற்புடைய தொழில்கள் குறித்த பட்டியல்

1. கம்ப்யூட்டர் புரோகிராமிங்
2. டேட்டா பிராசசிங்
3. கணினியில் ஸ்டிக்கர் தாயாரித்தல்
4. டெஸ்க்டாப் பப்ளிசிங்
5. ஆஃப்செட் மற்றும் ஃப்ளக்லோ பிரிண்டிங்
6. லேத் ஒர்க்ஸ்
7. சீட் மெட்டல் ஒர்க்ஸ்
8. கேஸ் வெல்டிங்
9. ஆர்க் வெல்டிங்
10. இரும்பு மேஜை நாற்காலிகள் தயாரித்தல்
11. இரும்பு கிரில் கதவு
12. துணியில் ஸ்கிரின் பிரிண்டிங் செய்தல்
13. கைத்தறியில் துணி நெய்தல்
14. பாலிதீன் வயர்கள் தயார் செய்தல்
15. அறுவடைக்கு பின்பான வேளாண் தோட்டக்கலை விளைபொருட்கள் சார்ந்த தொழில்கள்
16. மசாலா பவுடர் தயாரித்தல்
17. பயிறு மாவு தயாரித்தல்
18. ஜவ்வரிசி
19. சேமியா
20. காட்டாமணக்கு எரி எண்ணெய்
21. புளிப்பசை
22. முட்டைப்பொடி
23. எண்ணெய் பிழிதல்
24. கார்ன் ஃப்ளேக்ஸ்
25. ஊட்டச்சத்து பவுடர்
26. பால் பவுடர்
27. மாட்டுத் தீவனம்
28. கோழித்தீவனம்
29. சாக்லெட் தயாரித்தல்
30. உருளைக்கிழங்கு சிப்ஸ்
31. உணவு காளான் தயாரித்தல்
32. பழரசங்கள்
33. பால்குளிருட்டுதல் மற்றும் பதப்படுத்துதல்
34. சோற்றுக்கத்தாழை சோப், ஷேம்ப் & சத்துபானம்
35. ஐஸ்கிரீம்
36. ஊறுகாய்
37. காபிகொட்டை வறுத்து அரைத்தல்
38. அப்பளம்/ பப்படம் (உளுந்து /சவ்வரிசி)
39. சோடா (கலர் பானங்கள் தயாரித்தல்)
40. சுத்துகரிக்கப்பட்ட குடிநீர்
41. வெள்ளை ஐஸ் தயாரித்தல்
42. நெய் தயாரித்தல்
43. குளிரூட்டும் கிடங்கு
44. அடுமனை (பேக்கிரி) தயாரிப்புகள்
45. விவசாய கருவிகள்
46. கயிறு பொருட்கள்
47. நோட்டு புத்தகங்கள்
48. லேமினேஷன்
49. அலுமினிய பாத்திரங்கள்
50. பள்ளிப் பைகள்
51. சமையல் அடுப்புகள்
52. சாக்பீஸ், சாக் பவுடர் தயாரித்தல்
53. டயர் புதுப்பித்தல்
54. பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி
55. பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள்
56. வாழ்த்து மடல்கள்
57. காகித உறைகள்
58. அலுவலக பயன்பாட்டு பொருட்கள்
59. நாட்காட்டிகள்
60. காகித கூழ் பொம்மைகள்
61. விளையாட்டு பொருட்கள் உபகரணங்கள்
62. மண்புழு உரம்/இயற்கை உரம்
63. ஸ்பிரே பெயிண்டிங்
64. வாகன சீட் கவர்கள்
65. மழைக்கோட் / தொப்பி
66. சமையல் அடுப்புகள்

67. ரிஜட் பி.வி.சி. பைப்ஸ்
68. மாத்திரை மற்றும் மருந்துகள்
69. பினாயில், க்ளீனிங் பவுடர்
70. மின்னணு அழைப்பு மணி
71. டிஜிட்டல் கடிகாரங்கள்
72. சிறிய டிரான்ஸ் ஃபார்மர்
73. புக் பைண்டிங்
74. டி.வி. ஆண்டனா தயாரித்தல்
75. வாசனை எண்ணெய் தயாரித்தல்
76. டிஸ்டம்பர் தயாரித்தல்
77. டியூப் லைட் சோக் தயாரித்தல்
78. ஹவாய் செருப்புகள்
79. இரும்பு ஆணிகள்
80. சிறிய மின்னணு பல்புகள்
81. பிளாஸ்டிக் பொத்தான்கள்
82. மொசைக் கல், செராமிக் டைல்ஸ்
83. பேப்பர் கோன்
84. மிதி பாய் தயாரித்தல்
85. ரப்பர் மோல்டிங்
86. துணியில் பூ வேலைப்பாடு
87. டிங்கரிங் வேலைகள்
88. கருங்கல் ஜல்லி
89. செங்கல் சூலை
90. சிமெண்ட் ஹாலோ பிளாக்ஸ்
91. சிமெண்ட் கதவுகள் மற்றும் ஜன்னல்
92. உரக் கலவை
93. டிடர்ஜென்ட் பவுடர்
94. ஜனதாசெம் பவுடர்
95. ஆயத்த ஆடைகள்
96. மாவு அரைத்தல்
97. தாவர திசு வளர்ப்பு
98. ஆக்டிவேட்டட் தயாரித்தல்
99. இயற்கை உரம் தயாரித்தல
100. ஒருமுறை பயன்படுத்தப்படும் பேப்பர் கப்
101. பாக்கு மட்டையிலிருந்து தட்டு, கிண்ணம் தயாரித்தல்
102. மூலிகை மருந்துகள்
103. தகவல் தொழில நுட்ப மையங்கள்
104. மிக்சி, ஃபேன், வெட்கிரைண்டர் பழுது நீக்கம்
105. எண்ணெய் வகைகள் தயாரித்தல்
106. தேங்காய் பவுடர் (சிப்ஸ்)
107. கம்ப்யூட்டர் பயிலகம்
108. இணையதள மையங்கள்
109. கணினி பழுது நீக்கம்
110. செல்போன் பழுது நீக்கம்
111. ஜெராக்ஸ் இயந்திரம் பழுது நீக்கம்
112. இருசக்கர வாகனங்கள் பழுது நீக்கம்
113. குளிர்சாதனம் பழுது பார்த்தல்
114. எடை இயந்திரம் பழுது பார்த்தல்
115. டி.வி. ரேடியோ பழுது பார்த்தல்
116. வீடியோ கவரேஜ்
117. ஒலி, ஒளி அமைப்பு
118. காய்கறி பதனிடுதல்
119. பம்ப் மோட்டார் சர்வீசிங்
120. தானியங்கி வாகனங்கள் பழுது பார்த்தல்
121. வீட்டு உபயோக மின்னணு பொருட்டுகள் பழுது பார்த்தல்
122. தட்டச்சு இயந்திரம் பழுது பார்த்தல்
123. சைக்கிள் பழுது பார்த்தல்
124. நகலகம்
125. பேட்டரி சார்ஜ் செய்தல்
126. விளம்பரம் செய்தல்
127. மின்சார அலங்காரப் பணிகள்
128. கேபிள் டி.வி.
129. பொது தொலைபேசியகம்
130. ப்யூட்டி பார்லர்
131. ஆட்டோ ரிக்ஷா வாடகை
132. மின் சாதனங்கள் பழுது பார்த்தல்
133. துணி அலங்கார பந்தல் மற்றும் பர்னிச்சர் வாடகை
134. மின் மோட்டார் பழுது பார்த்தல்.காயில் சுற்றுதல்
135. ஆயில் இன்ஜின் பழுது பார்த்தல்
136. ஜெனரேட்டர் பழுது பார்த்தல்
137. தையல் இயந்திரம் பழுது பார்த்தல்
138. உடற்பயிற்சி கூடங்கள்
139. குழந்தைகள் காப்பகம்



# தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்


203, அழகேசன் சாலை, சாயிபாபா காலனி, கோயமுத்தூர் - 641 011.
தொலைபேசி : 0422 - 2441086 நிகரி : 0422 - 2457404
தமிழ்நாடு, இந்தியா.


kalaikathir : 0422 - 2215454/55